

மேனாள் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்களின் துணைவியாரும்,சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பா ளர் வீரபாண்டி ஆ.பிரபு தயாருமான திருமதி. லீலா ஆறுமுகம் அவர்கள் திடீர் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை,முரசொலி அலுவலகம் அருகே உள்ள சூர்யா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டு, நேற்று (31.08.2025) காலை இயற்கை எய்தினார் என்பதினை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இச்செய்தியறிந்ததும் கழக இளைஞர் அணி செய லாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த திருமதி லீலா ஆறுமுகம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

### முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 102–வது பிறந்தநாள்!

# மாபெரும் கிரிக்கெட் போட்டி - பரிசளிப்பு விழா!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி,செப்.1-

தூத்துக்குடி தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102-வது பிறந்தநாளை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நலத்திட்டம் வழங்குதல் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல் போன்ற வகையில் எழுச்சியுடன் கடைபிடிக்க வேண்டுமென தி.மு.க தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.

அதன் நிறைவாக திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 200 அணிகள் பங்கேற்ற கிரிக்கெட் போட்டி நடைபெற்றுள்ளது. வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசு வழங்கும் விழா 03.09.2025 அன்று மாலை 4.30 மணிக்கு தண்டுபத்தில் உள்ள பசுங்கிளி அம்மாள் - ராமமூர்த்தி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்ற 10 அணிகளுக்கு கோப்பை மற்றும் முதல் பரிசாக ரூ.1,00,000 இரண்டாம் பரிசாக ரூ.80,000 மூன்றாம் பரிசாக ரூ.70,000 நான்காம் பரிசாக ரூ.50,000 ஐந்தாம் பரிசு ரூ.40,000 ஆறாம் பரிசு ரூ.30,000 ஏழாம் பரிசு ரூ.25,000 எட்டாம் பரிசு ரூ.20,000, ஒன்பதாம் பரிசு ரூ.15,000 பத்தாம் பரிசு ரூ.10,000 வழங்கப்படவுள்ளது.

மேலும் சிறந்த பேட்ஸ்மேன், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த ஆல்ரவுண்டர் தேர்வு செய்யப்பட்டு சிறப்பு பரிசுகள் வழங்கப்படவுள்ளது. அதேபோல் போட்டியில் பங்கேற்ற அனைத்து கிரிக்கெட் அணிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளது.

எனது (அனிதா சு.ராதாகிருஷ்ணன்) தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி பங்கேற்று பரிசு, கோப்பை மற்றும் கிரிக்கெட் விளையாட்டுக் அணிகளுக்கு உபகரணங்கள் வழங்கி சிறப்புரை யாற்ற உள்ளார்.

இந்த நிகழ்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற மக்கள் பிரதிநிதிகள் திருச்செந்தூர் தொகுதி கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் கிரிக்கெட் விளையாட்டு விரும்பிகள் பெருமளவில் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வல்லம் ஒன்றியம் நாட்டார் மங்கலத்தில்

# நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்!

## முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப். 1-

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் நாட்டார்மங்களம் தனியார் பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட சுகாதார இணை இயக்குனர் பொறுப்பு டாக்டர் லதா தலைமை தாங்கினார்.

வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தார்.

விழுப்புரம் மாவட்ட மருத்துவ சுகாதார அலுவலர் டாக்டர் செந்தில்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ குத்து விளக்கு ஏற்றிவைத்து முகாமினை தொடங்கி வைத்தார்.

முகாமில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன்,சசிகலா மோகனசுந்தரம்உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில் பொது மருத்துவம், இதயம், எலும்பு, நரம்பியல், தோல் ,மகப்பேறு, குழந்தைகள் நலன், நுரையீரல், அறுவை சிகிச்சை, கண் காது மூக்கு தொண்டை, மனநலம்,பல், சித்தா, இயன்முறை சிகிச்சை, கதிர் இயக்க சிகிச்சை, மற்றும் சர்க்கரை நோய் உள்ளிட்ட 17 வகை மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டது.

முகாமில் பங்கேற்றவர்களுக்கு ரத்தப் பரிசோதனை இசிஜி உள்ளிட்ட பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டது.

மேலும் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்களுக்கு எக்கோ, கார்டியா கிராம், எக்ஸ்ரே அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் முதல்வரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்கள் முகாமில் வழங்கப்பட்டது .

இந்த முகாமில் 2300 க்கும் மேற்பட்டவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன.

மருத்துவ முகாமில் பயனடைந்தவர்கள் அனைத்து நோய்களுக்கும் ஒரே இடத்தில் தீர்வு காணப்படுவதால் வயதானவர்கள் எந்த ஒரு சிரமமும் இன்றி தங்களது உடல்நிலை ஒரே இடத்தில் பரிசோதனை செய்துஅந்தந்த சிகிச்சைக்கு தேவையான மருந்து மாத்திரைகள் மருத்துவர்கள் கொடுத்து அனுப்புகின்றனர் இது போன்ற ஒரு உன்னதமான திட்டத்தை அறிவித்து செயல்படுத்துகின்ற தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

# தமிழக டி.ஜி.பி.யாக (பொறுப்பு) வெங்கட்ராமன் நியமனம்!



சென்னை, செப். 1-

தமிழக காவல் துறை படைத்தலைவர் மற்றும் சட்டம் ஒழுங்கு டி.ஜி.பி.,யாக பணிபுரிந்து வரும் சங்கர் ஜிவால், நேற்று (ஆக.31) ஓய்வு பெற்றார். இதையடுத்து தமிழக போலீசின் நிர்வாகப் பிரிவு டிஜிபி.,ஆக பதவி வகித்து வரும் வெங்கட்ராமனுக்கு கூடுதலாக டிஜிபி பதவி (பொறுப்பு) வழங்கி தமிழக அரசு அறிவித்துள்ளது.



புதூர் ஊராட்சி ஒன்றியம், கந்தசாமிபுரம் ஊராட்சி, புதுச்சின்னையாபுரம் கிராம குடிநீர் கண்மாயில் கிணறு அமைப்பதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.நிகழ்வில் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ், தூத்துக்குடி வடக்கு மாவட்ட கலை இலக்கிய அணி துணை அமைப்பாளர் பாலமுருகன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பால்ராஜ், கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய தேர்தல் பார்வையாளர் சாமி சுப்புராஜ், உள்ளிட்ட கிராம பொதுமக்கள் உடன் இருந்தனர்.



தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ.. மகாராஜன் எம் எல் ஏ.ஆகியோர் ஆலோசனைப்படி தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர்ஹைவேஸ் பேருராட்சி தலைவராக நித்திய பிரியா பாலகிருஷ்ணன் பதவி ஏற்றார் உடன்துணை தலைவர் ராணி செந்தில் குமார் ஹைவேஸ் பேரூர் கழக செயலாளர் கணேசன் கவுன்சிலர்கள் கணேசன் . சுருளி வேல் . சந்திரன் . கிஷோர்குமார் செல்வி. மூனீஸ்வரி மாவட்ட பிரதிநிதி ரமேஷ். ஒன்றிய பிரதிநி செந்தில் குமார் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம்நாட்டார் மங்கலத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்துமாற்றுத்திறனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். உடன்முன்னாள்சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட மருத்துவ பணிகள் இணை இயக்குனர்டாக்டர் லதா, மாவட்ட மருத்துவ அலுவலர் டாக்டர் செந்தில்குமார்,ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.

### மண்மேடு, கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு!

# திருவண்ணாமலை தூய்மை அருணை பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

திருவண்ணாமலை, செப். 1-

திருவண்ணாமலையில் வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மண்மேடுகள், கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உத்திரவிட்டார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு

39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

கிரிவலப்பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜுலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

31.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00மணிக்கு வார்டு எண் 39, திருக்கோயிலூர் ரோடு, சாரோனை சுற்றியுள்ளப் பகுதிகளில் மண்மேடுகள், கால்வாய் அடைப்பு, மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.30மணிக்கு, வார்டு எண்.38 திருக்கோவிலூர் ரோடு, வணிகப் பகுதிகளில் உள்ள நடைபெற்று வரும் கால்வாய் அடைப்பு,

காலை 7.45மணிக்கு, வார்டு எண்.21 அஜிஸ் காலனி பகுதியில் செடிகள் நிரம்பிய புதர்கள் மற்றும் கால்வாய் தூர்வரும் பணியினை பார்வையிட்டும்,

காலை 8.00மணிக்கு, வார்டு எண்.17 இராமலிங்கனார் தெருவில் நடைபெறும் கால்வாய் அடைப்பு தூய்மைப் பணிகள்,

காலை 8.15மணிக்கு, வார்டு எண்.12, கட்டபொம்மன் தெருவில், நெடுஞ்சாலைத்துறை சார்பாக கட்டப்பட்ட கால்வாய் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 8.30மணிக்கு, வார்டு எண்.04, பெரியார் சிலை அருகில், கிருத்துவ தேவாலயம் அருகே நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்யிட்டு ஆய்வு செய்தார்.

அங்கு தூய்மை அருணை ஒருங்கிணைப்பாளர்களுடன் இணைந்து, தூய்மை பணியில் ஈடுபட்டு வந்த மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுடன் தேநீர் அருந்தி அவர்களை உற்சாகப்படுத்தினார்.

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.08 அண்ணா சாலையில் நடைபெறும் தூய்மை பணியினை பார்வையிட்டார்.

பின்னர் பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலையிக்கு கீழே உள்ள சேதமடைந்திருக்கும் பீடத்தினை பார்வையிட்டு, அதை சீரமைக்கும் பணிக்குறித்து, பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார்.

ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார் .

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன், துணை மேயர் சு.ராஜாங்கம், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில் மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ் கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு. எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவரேகாவிஜயராஜ், அருணை.வெங்கட் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.



அரியலூர் தொகுதி தா.பழூர் மத்திய ஒன்றிய சார்பில் ஒன்றிய செயற்குழு கூட்டம் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களின் ஆனணக்கிணங்க , கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஒன்றிய பொறுப்பாளர் இரா.அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற அரியலூர் தொகுதி மேலிட பொறுப்பாளர் வளவனூர் ப.அன்பரசு ஆலோசனைகளை வழங்கினார். மத்திய ஒன்றிய மேற்பார்வையாளர் கருப்புசாமி , பொதுக்குழு உறுப்பினர் வி.எம். ஷாஜஹான் ஆகியோர் முன்னிலையிலும் மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகளும் கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



தேனி வடக்குமாவட்ட தேனி வடக்குஒன்றிய சார்பாக ஓரணியில், தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பூர்த்தி செய்யப்பட்ட படிவம் தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி அவர்களிடம் தேனி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் சக்கரவர்த்தி வழங்கினார் உடன் தேனி வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் ராமதாஸ் தேனி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் முருக ஜெகதீசன். தேனி வடக்கு ஒன்றிய தொண்டர் அணி அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.